# Bienvenue

# நல்வரவு



En France, **l'école publique est gratuite et l'instruction est obligatoire** pour les filles et les garçons âgés de 3[1] à 16 ans. Le parcours de l'élève commence à **l'école maternelle** à 3 ans (voire 2 ans dans la limite des places disponibles) et peut se poursuivre au-delà de 16 ans.

Aller à l'école est **un droit** pour tous les enfants français et étrangers qui vivent en France.

**L'école respecte et enseigne les valeurs de la République française :** tous les enfants sont accueillis et respectés quels que soient leur origine, leur nationalité, leur religion, leur sexe, leur statut familial, leur handicap. Les garçons et les filles étudient dans les mêmes classes et sont traités à égalité.

**L'école publique est laïque :** elle respecte les cultures, les langues et la religion de chacun. Ni les enfants, ni les adultes ne peuvent promouvoir à l'école, sous aucune forme, leur confession religieuse et/ou leurs opinions politiques.

**À l'école, votre enfant apprend la langue française.** Parler français est une nécessité car le français est la langue de la République. À l'école, c'est en français que votre enfant apprend à parler, lire, écrire, compter.



Cependant, il est important pour lui de continuer à parler dans sa langue d'origine.

À l'école, les enfants apprennent **à vivre ensemble,** à mieux se connaître, à partager leurs cultures.

**பிரான்ஸ் நாட்டில், 3[1] வயது முதல் 16 வயது வரையிலுள்ள சிறுவர்-சிறுமியருக்கு அரசு கல்விக்கூடங்களில் அனுமதி இலவசம் மட்டுமன்றி கல்வி கற்பதும் கட்டாயமாக இருக்கிறது** .

மாணவர் ஒருவரின் கல்வி வாழ்க்கை 3 வயதில் தொடங்கி (இட வசதிப் பொறுத்து 2 வயதிலும் தொடங்கலாம்) 16 வயதைத் தாண்டியும் செல்லக்கூடும்.

பிரான்ஸில் வசிக்கும் பிரெஞ்சு மற்றும் அந்நிய நாட்டுக் குழந்தைகள் அனைவருக்கும் கல்வி கற்பது **அடிப்படை உரிமை. பள்ளிக்கூடம் பிரெஞ்சுக் குடியரசை மதிக்கிறது, அதன் மதிப்பீடுகளைக்கற்றுக்கொடுக்கிறது** :

எல்லாக் குழந்தைகளும் அவர்களுடைய பிறப்பு, தாயகம், மதம், பால், சமூக நிலை, உடல் ஊனம் இவற்றை பொருட்படுத்தாமல் வரவேற்கப்பட்டு மதிக்கப்படுகிறார்கள். ஆண்-பெண் குழந்தைகள் ஒன்றாக ஒரே வகுப்பில் கல்வி கற்பதுடன், சம்மாக கருதப்படுகிறார்கள்

**அரசுப் பள்ளிக்கூடங்கள் மதசார்பற்றவை** : ஒவ்வொருவரின் பண்பாடு, தாய்மொழி, மதம் இவற்றை பள்ளிகள் மதிக்கின்றன. குழந்தைகளோ, பெரியவர்களோ பள்ளிக்கூடங்களில் தங்களுடைய மதக்கொள்கைகளையோ அரசியல் கருத்துகளையோ எந்த வடிவிலும் பரப்பக்கூடாது.

பிரெஞ்சு பேசுவது ஒரு அவசியத் தேவை, ஏனென்றால் அதுதான் குடியரசின் அரசு மொழி. பள்ளியில் உங்கள் குழந்தை பேச, படிக்க, எழுத, எண்ணிப் பார்க்கக் கற்பதெல்லாம் பிரெஞ்சு மொழியில்தான். இருந்தபோதிலும், தன்னுடைய தாய்மொழியில் தொடர்ந்து பேசுவது குழந்தையைப் பொறுத்தவரை மிகவும் முக்கியமானது.

பள்ளியில் குழந்தைகள் **ஒன்றாகச் சேர்ந்து வாழ்ந்து,** ஒருவரையொருவர் நன்றாக அறிந்துகொண்டு, தத்தம் பண்பாட்டு அம்சங்களைப் பகிர்ந்துகொள்ளக் கற்றுக்கொள்கிறார்கள்



[1] *Obligation d'instruction de 6 à 16 ans jusqu'au 31 août 2019, puis de 3 à 16 ans à partir de septembre 2019.*



# *L'école* française

En France, la scolarisation des enfants est organisée en fonction de leur âge.

De 3 ans (parfois 2) jusqu'à 6 ans, l'enfant est accueilli à **l'école maternelle** qui est organisée en 3 niveaux : petite, moyenne et grande sections. Elle est le lieu des premiers apprentissages qui favorisent la réussite scolaire.

**L'école élémentaire** accueille les enfants de 6 à 11 ans. Elle comporte cinq niveaux : le CP (cours préparatoire), le CE1 (cours élémentaire 1re année), le CE2 (cours élémentaire 2e année), le CM1 (cours moyen 1re année) et le CM2 (cours moyen 2e année).

**Le collège** accueille tous les élèves après l'école élémentaire. Il est organisé en quatre niveaux : la 6e (sixième), la 5e (cinquième), la 4e (quatrième) et la 3e (troisième).

**Le lycée** accueille les élèves qui poursuivent des études générales, technologiques ou professionnelles après le collège.

## *Comment votre enfant apprend-il le français ?*

Tous les adultes de l'école sont attentifs à aider votre enfant dans l'apprentissage de la langue française.

À l'école maternelle, l'apprentissage de la langue se construit dans le partage avec les autres enfants des jeux et activités proposés par les enseignants.

À l'école élémentaire, au collège ou au lycée, votre enfant est inscrit dans une classe ordinaire et bénéficie d'un enseignement spécifique de français pour quelques heures dans la semaine avec des élèves nouveaux arrivants de sa classe et d'autres classes ; dans certains établissements scolaires, il est inscrit dans une classe spécifique avec d'autres élèves nouveaux arrivants pour apprendre le français.

De votre côté, vous pouvez aider votre enfant à apprendre plus vite le français en l'inscrivant à des activités sportives, culturelles ou sociales dans le quartier.

Une bonne maîtrise de la langue française orale et écrite est indispensable à votre enfant pour réussir sa scolarité, poursuivre sa formation, construire son avenir.

# *பிரெஞ்சு கல்வி முறை*

பிரான்சில், குழந்தைகளின் கல்வி அவர்களுடைய வயதைப் பொறுத்து அமைக்கப்பட்டுள்ளது.

3 வயதிலிருந்து (சில சமயம் 2 வயதிலிருந்து) 6 வயது வரை, குழந்தையைச் சிறுவர் பள்ளியில் (L'école maternelle) சேர்க்க வேண்டும். அனுமதி இலவசம். சிறுவர் பள்ளி மூன்று நிலைகளில் அமைக்கப்பட்டுள்ளது: சிறிய, நடுத்தர, பெரிய பிரிவுகள். பள்ளி வாழ்க்கையின் வெற்றிக்குப் பெரிதும் உதவும் முதல் கட்டப் பயிற்சி இங்குதான் நடக்கிறது.

தொடக்கப் பள்ளி (L'école élémentaire) 6 வயது முதல் 11 வயது வரை உள்ள குழந்தைகளை ஏற்றுக்கொள்கிறது. இது ஐந்து நிலைகளைக் கொண்டது : CP (தயார் செய்யும் வகுப்பு) CE1 (முதல் வருட தொடக்க வகுப்பு) CE2 (இரண்டாம் வருட தொடக்க வகுப்பு) CM1 (முதல் வருட நடுத்தர வகுப்பு) CM2 (இரண்டாம் வருட நடுத்தர வகுப்பு).

இடைநிலைப் பள்ளி (Le collège) தொடக்கப் பள்ளியை முடித்த எல்லா மாணவர்களையும் வரவேற்கிறது. இது நான்கு நிலைகளில் அமைக்கப்பட்டிருக்கிறது : 6ème (ஆறாவது), 5e (ஐந்தாவது), 4e (நான்காவது), மற்றும் 3e (மூன்றாவது) வகுப்புகள்.

மேல்நிலைப் பள்ளியில் (Le lycée), இடைநிலைப் பள்ளிக்குப் பிறகு, பல சாத்தியக்கூறுகளை அளிக்கும் பொதுவான, அறிவியல் சார்ந்த தொழில்நுட்ப அல்லது தொழில் ரீதியான கல்வியைத் தொடரும் மாணவர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.

## உங்கள் குழந்தை பிரெஞ்சு கற்பது எப்படி?



பள்ளியிலுள்ள பெரியவர்கள் அனைவரும் உங்கள் குழந்தை பிரெஞ்சு மொழி கற்றுக்கொள்ள உதவுவதில் கவனமாக இருப்பார்கள்.

மழலையர் பள்ளியில், கற்பித்தல் ஆசிரியர்கள் வழங்கப்படும் மற்ற குழந்தைகள் விளையாட்டுகள் மற்றும் செயற்பாடுகளை பகிர்ந்துகொள்வதன் மூலம் கட்டியெழுப்பப்படுகிறது

தொடக்க, இடைநிலை, மேல்நிலைப் பள்ளிகளில் உங்கள் குழந்தை ஒரு முறையான வகுப்பில் சேர்க்கப்படும். தன்னுடைய வகுப்பிலிருந்தும் மற்ற வகுப்பிலிருந்தும் பிரான்ஸுக்கு அண்மையில் வந்து சேர்ந்த இன்னும் சில குழந்தைகளுடன் வாரத்தில் சில மணிநேரம் பிரத்தியேகமான பிரெஞ்சு மொழி கற்பிக்கும் வாய்ப்பைப் பெற முடியும் ; இன்னும் சில கல்வி நிறுவனங்களில், பிரெஞ்சு கற்பதற்காக வந்திருக்கும் மற்ற சில மாணவர்களுடன் உங்கள் குழந்தை தனிப்பட்ட ஒரு வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்படும்

உங்கள் பங்குக்கு, உங்களுடைய வீட்டிற்குப் பக்கத்தில் நடக்கும் விளையாட்டு, கலாச்சார, சமூக நிகழ்ச்சிகளில் உங்களுடைய குழந்தையைப் பங்குபெறச் செய்வதன்மூலம் பிரெஞ்சு மொழியை இன்னும் விரைவில் கற்றுக்கொள்வதற்கு நீங்கள் உதவ முடியும்.

தன்னுடைய பள்ளி வாழ்க்கையில் வெற்றி பெற்று, தனக்குத் தேவையான பயிற்சிகளை மேற்கொண்டு, தன்னுடைய தொழில் ரீதியிலான எதிர்காலத்தை அமைத்துக்கொண்டு, சமூகத்தில் வெற்றிகரமாக வாழ்வதற்கு பிரெஞ்சு மொழியைப் பேசுவதிலும் எழுதுவதிலும் நல்ல தேர்ச்சி பெற்றிருப்பது அத்தியாவசியமானது.

# *Votre enfant entre à l'école maternelle*


L'école maternelle permet à votre enfant de bien engager son apprentissage de la langue française : **la maîtrise de la langue française est absolument nécessaire à la réussite de sa scolarité.**

À l'école maternelle, votre enfant apprend à parler avec les adultes et avec les autres enfants. Il dessine, chante, danse, joue, compte, parle, écoute, invente… et commence à écrire.

Votre enfant découvre les livres et l'écriture, il se prépare à entrer à l'école élémentaire.

Votre enfant apprend aussi à vivre avec les adultes et les autres enfants de son âge en respectant les règles de l'école.

À l'école maternelle, vous accompagnez et venez chercher votre enfant aux horaires fixés. C'est un moment privilégié pour rencontrer les maîtres et d'autres parents. Si vous ne pouvez pas venir chercher votre enfant à l'école, il peut être confié à un autre adulte à condition que vous en donniez l'autorisation écrite. Chaque absence ou retard doit être justifié et les horaires doivent être respectés.




Les récréations sont des moments de pause entre les activités. Elles se déroulent dans la cour sous la surveillance des enseignants. Elles favorisent l'activité physique et les échanges entre enfants d'âges différents.

Le midi, votre enfant a la possibilité de déjeuner à l'école : les repas sont équilibrés. Ils respectent les règles alimentaires et, à la demande des parents et dans la mesure du possible, les règles religieuses.

Votre enfant peut se reposer l'après-midi dans un lieu spécialement aménagé et surveillé.

Vous pouvez demander à rencontrer le maître ou la maîtresse de votre enfant ou encore le directeur ou la directrice de l'école maternelle.



## சிறுவர் பள்ளியில் உங்கள் குழந்தையின் பிரவேசம்

சிறுவர் பள்ளிக்குத் தவறாமல் செல்வதன் மூலம் பிரெஞ்சு மொழி கற்கும் பாதையில் உங்கள் குழந்தை முறையாகச் செல்ல முடிகிறது : **பள்ளி வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு பிரெஞ்சு மொழியில் தேர்ச்சி பெறுவது மிகவும் அவசியம்.**

தொடக்கப் பள்ளியில், பெரியவர்களுடனும் மற்ற குழந்தைகளுடனும் பேசுவதற்கு உங்கள் குழந்தை கற்றுக்கொள்கிறது. அது படம் வரைந்து, பாடி, ஆடி, விளையாடி, விரல்விட்டு எண்ணி, பேசி, கேட்டு, கற்பனை செய்து... கடைசியில் எழுதவும் தொடங்குகிறது.

புத்தகத்தையும் எழுத்துவடிவத்தையும் அது கண்டுபிடிக்கிறது, இப்பொழுது தொடக்கப் பள்ளியில் நுழைவதற்குத் தன்னைத் தயார் செய்துகொள்கிறது. பள்ளி விதிமுறைகளுகுட்பட்டு, தன் வயதை ஒத்த சிறுவர்களுடனும் சில பெரியவர்களுடனும் பழகக் கற்றுக்கொள்கிறது.

சிறுவர் பள்ளியில் தினமும் குறிப்பிட்ட நேரத்தில் குழந்தையைக் கூட்டி வந்து, பின் அழைத்துச் செல்ல நீங்கள் வர வேண்டும். ஆசிரியர்களையும் மற்ற பெற்றோர்களையும் சந்திக்கக் கிடைக்கும் அரிய வாய்ப்பு இது. குழந்தையை அழைத்துச் செல்ல உங்களால் வர முடியவில்லை என்றால், எழுத்து மூலம் நீங்கள் அளிக்கும் அனுமதியுடன் வேறு ஒரு பெரியவரிடம் குழந்தை ஒப்படைக்கப்படும்நேரம் கழித்து வருவதற்கும், வராமல் இருப்பதற்கும் தகுந்த காரணங்கள் சொல்லப்பட வேண்டும். கால அட்டவணை மதிக்கப்பட வேண்டும்..

பள்ளி செயல்பாடுகளுக்கிடையில் கிடைக்கும் ஓய்வு நேரம் பொழுதுபோக்காக ஒதுக்கப்படும். பள்ளி முற்றத்தில் ஆசிரியர்கள் மேற்பார்வையில் அது நடக்கும். உடல் உழைப்புக்கு இடமளிப்பதுடன் பல வயதைச் சேர்ந்த குழந்தைகளுடன் கலந்து பழக உதவுகிறது.

நண்பகலில், உங்கள் குழந்தை பள்ளியில் உணவருந்தலாம் : இங்கு அளிக்கப்படுவது சரிவிகித உணவு. ஆரோக்கிய உணவின் விதிமுறைகள் மதிக்கப்படுகின்றன, பெற்றோற்களின் வேண்டுகோளுக்கு இணங்க, முடிந்த வரையிலும், மதக் கோட்பாட்டு விதிமுறைகளும் பின்பற்றப் படும்.

மதிய வேளையில், பிரத்தியேகமாக அமைக்கபட்டு கண்காணிக்கப்படும் இடத்தில் குழந்தை இளைப்பாற முடியும்.

குழந்தையின் ஆசிரியரையோ அல்லது சிறுவர் பள்ளியின் இயக்குநரையோ விரும்பினால் நீங்கள் சந்திக்கலாம்

# *Votre enfant entre à l'école élémentaire*

**L'école élémentaire** est organisée en cinq classes en fonction de l'âge des enfants : le cours préparatoire (CP) de 6 à 7 ans ; les cours élémentaires première et deuxième année (CE1, de 7 à 8 ans et CE2, de 8 à 9 ans), les cours moyens première et deuxième année (CM1 de 9 à 10 ans et CM2 de 10 à 11 ans).

Chaque classe est placée **sous la responsabilité d'un maître** avec qui vous pouvez parler en toute confiance. N'hésitez pas à lui poser les questions qui vous paraissent importantes. Vous êtes régulièrement informé des progrès de votre enfant ou de ses difficultés grâce à un livret scolaire.

**À l'école élémentaire,** chaque absence ou retard doit être justifié et les horaires doivent être respectés.

**À l'école élémentaire,** votre enfant apprend à lire, à écrire et à compter, il étudie aussi les sciences, la technologie, l'histoire et la géographie, il fait de la musique, du sport ; il va à la piscine. Il utilise un ordinateur. Toutes ces activités sont importantes pour son développement. Elles sont obligatoires.

Pour votre enfant, **la priorité est la maîtrise du français** qui va lui permettre d'apprendre dans toutes les disciplines. Tous les adultes de l'école sont attentifs à l'aider à maîtriser la langue française. De votre côté, vous pouvez y contribuer en l'inscrivant à des activités sportives, culturelles ou sociales dans le quartier.

**Le socle commun de connaissances et de compétences** rassemble les connaissances, compétences, valeurs et attitudes qui sont nécessaires à votre enfant pour réussir sa scolarité, sa vie d'individu et de futur citoyen.

**Un livret personnel de compétences** permet de suivre la progression de chaque élève.

Des évaluations des connaissances et des compétences des élèves ont lieu au début du CP, à la mi-CP et au CE1. Votre enfant pourra bénéficier d'heures **d'accompagnement personnalisé** pour progresser dans ses apprentissages, notamment de la langue française. **Des stages de remise à niveau** peuvent être également proposés à votre enfant : une semaine pendant les vacances scolaires.

Le soir à la maison, demandez à votre enfant ce qu'il a fait à l'école, ce qu'il a appris, ce qu'il va faire le lendemain ; parlez avec lui.

**Rassurez votre enfant :** soyez attentif à ce qu'il apprend, à ce qu'il dit de ce qui se passe dans de cette nouvelle école, dans ce nouveau pays.
Vous pouvez rencontrer le maître de votre enfant ou le directeur de l'école primaire.

# தொடக்கப் பள்ளியில் உங்கள் குழந்தையின் பிரவேசம்

**தொடக்கப் பள்ளி** குழந்தைகளின் வயதை பொறுத்து 5 வகுப்புகளாகப் பிரித்து அமைக்கப்பட்டுள்ளது : தயார் செய்யும் வகுப்பு (CP) 6 முதல் 7 வயது வரை முதல், இரண்டாம் வருட தொடக்க வகுப்புகள் (CE1, 7 முதல் 8 வயது வரை மற்றும் CE2, 8 முதல் 9 வயது வரை), முதல், இரண்டாம் வருட நடுத்தர வகுப்புகள் (CM1, 9 முதல் 10 வயது மற்றும் CM2, 10 முதல் 11 வயது வரை).

ஒவ்வொரு வகுப்பும் **ஒரு ஆசிரியரின் பொறுப்பில்** இருக்கும். அவரிடம் நீங்கள் மனம் விட்டுப் பேசலாம். உங்களுக்கு மிகவும் முக்கியமாகத் தோன்றும் கேள்விகளை அவரிடம் தயங்காமல் கேளுங்கள். பள்ளிக் கையேடு ஒன்று உங்கள் குழந்தையின் முன்னேற்றம் அல்லது பிரச்சினைகள் பற்றி தவறாமல் உங்களுக்குத் தெரியப்படுத்தும்.

**தொடக்கப் பள்ளியில்** நேரம் கழித்து வருவதற்கும், வராமல் இருப்பதற்கும் தகுந்த காரணங்கள் சொல்லப்பட வேண்டும். கால அட்டவணை மதிக்கப்பட வேண்டும்.

**தொடக்க பள்ளியில்** உங்கள் குழந்தை படிக்க, எழுத, எண்ணக் கற்றுக்கொள்ளும். அறிவியல், தொழில் நுட்பம், வரலாறு, புவியியல் பாடங்களும் உண்டு. இசை மட்டும் விளையாட்டுகள் சொல்லித்தரப்படும். நீச்சல் குளத்திற்கு அழைத்துச் செல்வார்கள். குழந்தை கணிப்பொறியைப்பயன்படுத்தும். குழந்தையின் வளர்ச்சிக்கு இந்த செயல்பாடுகள் அனைத்தும் அவசியம். இவை எல்லாவற்றிலும் உங்கள் குழந்தை கட்டாயமாக பங்குபெற வேண்டும். உங்கள் குழந்தையின் **பிரெஞ்சு மொழி தேர்ச்சிதான் அத்தியாவசியமானது**. எல்லாப் பாடங்களையும் கற்க இது உதவும். பள்ளியின் பெரியவர்கள் அனைவரும் குழந்தையின் பிரெஞ்சு மொழித் தேர்ச்சிக்கு உதவுவதில் கவனமாக இருப்பார்கள். உங்கள் பங்குக்கு, உங்களுடைய வீட்டிற்குப் பக்கத்தில் நடக்கும் விளையாட்டு, கலாச்சார, சமூக நிகழ்ச்சிகளில் உங்கள் குழந்தையைப் பங்குபெறச் செய்வதன் மூலம் நீங்களும் உதவலாம்.

பள்ளி வாழ்க்கை, தனி மனித மற்றும் பிற்காலக் குடிமகன் என்ற அளவில் வெற்றி பெற வழிவகுக்கும் அறிவு, திறமைகள், மதிப்பீடுகள் மற்றும் மனப்பாங்கு இவற்றை ஒருங்கிணைக்கும் வகையில் **அறிவு மற்றும் திறமைகளின் அடித்தளம் அமைந்துள்ளது.**

**ஒரு சொந்த தேர்ச்சிக் கையேடு** ஒவ்வொரு மாணவரின் முன்னனேற்றத்தையும் பதிவு செய்கிறது.

CE1 மற்றும் CM2 நிலைகளின் தொடக்கத்தில் மாணவர்களின் அறிவு வளர்ச்சியும் திறமைகளும் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

கல்வி பயிலும் முயற்சியில் முன்னேற்றம் அடைய (குறிப்பாக பிரெஞ்சு மொழியில்) சில மணி நேரங்கள் தனிப்பட்ட **சிறப்புக் கவனம்** பெறும் வசதியும் உங்கள் குழந்தைக்குக் கிடைக்கும்.

**சரியான நிலைக்குத் தகுதி பெற உதவும் சிறப்பு வகுப்புகள்** தேவைக்கேற்ப உங்கள் குழந்தைக்கு அளிக்கப்படும் : பள்ளி விடுமுறை நாட்களில் ஒரு வாரத்துக்கு அளிக்கப்படும்.

வீட்டில் மாலை நேரங்களில் உங்கள் குழந்தையிடம் அவன் பள்ளியில் என்ன செய்தான், என்ன கற்றுக்கொண்டான், அடுத்த நாள் என்ன செய்யப் போகிறான் என்றெல்லாம் கேளுங்கள் : குழந்தையுடன் நிறையப் பேசுங்கள்.

குழந்தைக்கு ஆதரவுடன் ஊக்கமளியுங்கள் : அவன் என்ன கற்றுக்கொள்கிறான், இந்தப் புதிய பள்ளியில், புதிய நாட்டில் நடப்பவைப் பற்றி இவன் என்ன சொல்கிறான் என்பதைக் கவனமாகக் கேளுங்கள்.

உங்கள் குழந்தையின் ஆசிரியரையோ, தொடக்கப் பள்ளி இயக்குநரையோ நீங்கள் விரும்பினால் சந்திக்கலாம்.

# *Votre enfant entre au* collège

La personne qui dirige le collège est **le principal**, que vous pouvez demander à rencontrer. Il est en général aidé d'un adjoint.
Le collège est organisé en quatre niveaux : la 6e, la 5e et la 4e, la 3e.
Au collège, votre enfant étudie avec plusieurs professeurs, chacun est spécialiste d'une discipline.

**Le professeur principal et le conseiller principal d'éducation (CPE)** sont vos premiers interlocuteurs : n'hésitez pas à demander à les rencontrer pour savoir si tout se passe bien en classe et dans le collège pour votre enfant.
Vous êtes régulièrement informé du travail de votre enfant grâce au **carnet de correspondance**, au **bulletin scolaire trimestriel** et aux **réunions qui réunissent professeurs et parents**.
Au collège, votre enfant acquiert beaucoup de connaissances dans de nombreux domaines : français, mathématiques, sciences, technologie, histoire, géographie, sport, musique, langue étrangère… Il utilise un ordinateur.

Votre enfant doit maîtriser la langue française pour pouvoir étudier dans toutes les autres disciplines. Tous les professeurs de sa classe sont attentifs à faciliter son apprentissage. De votre côté, vous pouvez y contribuer en l'inscrivant à des activités sportives, culturelles ou sociales dans le quartier.
Votre enfant a besoin de temps pour se familiariser avec le français oral et écrit.

**Une aide individualisée** peut être organisée pour aider votre enfant en français ou dans les autres apprentis- sages, à raison de deux heures par semaine ; **de l'aide aux devoirs** peut également lui être proposée. Enfin, un projet personnalisé de réussite éducative peut être convenu entre vous, votre enfant et l'équipe éducative.

La dernière année du collège, les élèves passent un examen national : le diplôme national du brevet (DNB) et doivent valider les sept grandes compétences du socle commun de connaissances et de compétences.

Au collège, votre enfant apprend à devenir plus autonome dans son travail : vous pouvez l'aider à le devenir : vérifiez avec lui s'il n'a pas un travail à faire pour le lendemain ou les jours suivants ou bien un document à vous remettre.
Lorsqu'il rentre le soir, demandez-lui ce qu'il a fait dans la journée et ce qu'il a appris. Parlez avec lui. Manifestez votre intérêt pour sa scolarité.

À l'issue de la classe de 3e, une procédure d'orientation permettra à votre enfant, en fonction de ses compétences, de ses souhaits et des vœux de ses parents, de poursuivre des études **en lycée professionnel** ou **en lycée général ou technologique,** ou encore de fréquenter **un centre de formation pour apprentis (CFA).**

## இடைநிலைப் பள்ளியில் உங்கள் குழந்தையின் பிரவேசம்

இடைநிலைப் பள்ளியின் இயக்குநர் **பிரின்சிபால்** (Principal) என்று அழைக்கப்படுகிறார். அவரை நீங்கள் சந்திக்கலாம். பொதுவாக, அவருக்கு ஒரு உதவியாளர் இருப்பார்.
இடைநிலைப் பள்ளி 4 நிலைகளாக பிரிக்கப்பட்டுள்ளது : 6-வது (6ème), 5-வது (5ème), 4-வது (4ème), 3-வது (3ème)
இடைநிலைப் பள்ளியில், உங்கள் குழந்தைக்குப் பல ஆசிரியர்கள் இருப்பார்கள் ; ஒவ்வொருவரும் தத்தம் துறையில் வல்லுநர்கள்.
**பிரதான தலைமை ஆசிரியரும், பிரதான கல்வி ஆலோசகரும்தான் (CPE)** நீங்கள் முதலாவதாக சந்திப்பவர்கள் : வகுப்பிலும், இடைநிலைப் பள்ளியிலும் உங்கள் குழந்தையைப் பொறுத்தவரை எல்லாமே சரியாக நடந்துகொண்டிருக்கிறதா என்று அவர்களிடம் தயங்காமல் கேட்டுத் தெரிந்துகொள்ளவும்.
**தகவல் பரிமாற்ற நோட்டுப் புத்தகம், மூன்று மாதத்திற்கு ஒரு முறை படிப்பு குறித்த அறிக்கை மற்றும் ஆசிரியர்கள் பெற்றொர்களிடையேயான சந்திப்புகள்** மூலம் தொடர்ந்து உங்கள் குழந்தையுடைய உழைப்பு குறித்து நீங்கள் அறிந்துகொள்ளலாம்.
இடைநிலைப் பள்ளியில், பல்வேறு துறைகளில் நிறைய அறிவை உங்கள் குழந்தை பெறுகிறது : பிரெஞ்சு மொழி, கணிதம், அறிவியல் துறைகள், தொழில்நுட்பம், வரலாறு, புவியியல், விளையாட்டு, இசைப் பயிற்சி, அந்நிய மொழி... குழந்தை கணிப்பொறியையும் பயன்படுத்தும்.
மற்ற எல்லாத் துறைகளிலும் கல்வி பெறுவதற்கு உங்கள் குழந்தை பிரெஞ்சு மொழியில் தேர்ச்சி பெற வேண்டும். ஆசிரியர்கள் அனைவரும் அதைப் பயில உதவுவதில் மிகுந்த அக்கறை செலுத்துவார்கள். உங்கள் பங்குக்கு, உங்கள் வீட்டிற்குப் பக்கத்தில் நடக்கும் விளையாட்டு , கலாச்சார மற்றும் சமூக நிகழ்ச்சிகளில் உங்கள் குழந்தையைப் பங்குபெறச் செய்வதன் மூலம் உதவ முடியும். உங்கள் குழந்தை பிரெஞ்சில் பேச, எழுதக் கற்றுக்கொள்வதற்கு கொஞ்ச காலம் தேவைப்படும்.
பிரெஞ்சு கற்றுக்கொள்வதற்கோ அல்லது மற்ற பாடங்களுக்கோ வாரத்துக்கு இரண்டு மணி நேரம் என்ற அடிப்படையில் உங்கள் குழந்தைக்கு உதவுவதற்கு தனியாக **பிரத்தியேக உதவி வகுப்பு** ஏற்பாடு செய்து தரப்படலாம் ; **வீட்டுப்பாட உதவியும்** பெற்றுக்கொள்ளலாம். **வெற்றிக்கரமான கல்வி வாழ்க்கைக்கான தனிநபர் திட்டம்** ஒன்று உங்களுக்கும், உங்கள் குழந்தைக்கும், ஆசிரியர் குழுவுக்கும் இடையே நிறுவப்படுவதற்கும் வாய்ப்பு இருக்கிறது.
இடைநிலைப் பள்ளியின் கடைசி வருடத்தில், மாணவர்கள் தேசிய அளவிலான தேர்வு ஒன்றை எழுதுவார்கள் : **Le diplôme national du Brevet (DNB).** அறிவு வளர்ச்சி மற்றும் திறமைகளின் அடித்தளத்தில் அமைந்த ஏழு பெரும் திறமைப் பிரிவுகளில் அவர்கள் தேற வேண்டும்.
இடைநிலை பள்ளியில், உங்கள் குழந்தை தன்னுடைய உழைப்பில் சுயமாக்ச் செயல்படக் கற்றுக்கொள்கிறது : அப்படி இருப்பதற்கு நீங்களும் உதவ முடியும் : அடுத்த நாளோ அல்லது வரவிருக்கும் நாட்களிலோ செய்ய வேண்டிய வேலை ஏதாவது இருக்கிறதா அல்லது உங்களிடம் காட்ட வேண்டிய ஆவணம் ஏதாவது இருக்கிறதா என்று நீங்கள் பரிசீலனை செய்ய வேண்டும்.
மாலையில் வீட்டுக்கு வந்தவுடன் குழந்தையிடம் அன்றைய தினம் செய்தவை அல்லது கற்றுக்கொண்டவைப் பற்றி விசாரியுங்கள். குழந்தையுடன் நன்றாகப் பேசுங்கள். குழந்தையின் படிப்பில் உங்களுக்குள்ள அக்கறையை வெளிப்படுத்துங்கள். மூன்றாவது வகுப்பின் முடிவில், வழிகாட்டும் ஏற்பாடு ஒன்றின் மூலம், குழந்தையின் திறமைகளின் அடிப்படையிலும், அதனுடைய மற்றும் பெற்றோர்களின் விருப்பப்படியும் **தொழில் ரீதியான அல்லது பொதுவான அல்லது தொழிற்நுட்ப மேல்நிலைப் பள்ளியிலோ** தன்னுடைய படிப்பைத் தொடரலாம். அல்லது தொழிலாளர் பயிற்சி மையத்தில் (CFA) சேரலாம்

# *Votre fille ou votre fils entre au **lycée***

La personne qui dirige le lycée est **le proviseur.** Il est aidé d'un proviseur-adjoint : vous pouvez demander à les rencontrer.

En France, il existe deux types de lycées

**Le lycée d'enseignement général et technologique** prépare les élèves à la poursuite d'études supérieures.
Il comprend trois niveaux de classes : la seconde, la première et la terminale dans lesquelles les élèves suivent, selon leurs capacités et leurs souhaits, des enseignements plus approfondis en littérature, arts, langues vivantes, sciences, économie ou des disciplines d'enseignement technologique.
Le baccalauréat est le diplôme qui sanctionne la fin des études des études secondaires et correspond au premier grade universitaire de « bachelier ».

**Le lycée professionnel** prépare les élèves à une insertion plus rapide dans le monde du travail ; certains élèves peuvent cependant poursuivre des études supérieures.
Plusieurs diplômes peuvent être préparés, du CAP au baccalauréat professionnel. Les élèves suivent à la fois des enseignements généraux et des enseignements technologiques et professionnels.
Des stages obligatoires ont lieu en entreprise.

Dans l'emploi du temps de la classe, **un temps d'accompagnement personnalisé peut être consacré,** si besoin, à aider les élèves soit à progresser dans les disciplines où ils rencontrent des difficultés, soit à acquérir des méthodes de travail, soit à travailler sur le projet d'orientation post-baccalauréat. Grâce à ce temps d'accompagnement, votre enfant aura la possibilité de progresser dans la maîtrise de la langue française.

**Au lycée,** les élèves bénéficient d'une grande autonomie. Pour réussir, ils doivent fournir un travail important à la maison. Assurez-vous que votre enfant comprend bien en classe ce qu'il doit faire.

Vous pouvez prendre rendez-vous avec le professeur principal ou le conseiller principal d'éducation, si vous ou votre enfant êtes inquiets.

**Au lycée, la procédure d'orientation** est très importante. Votre enfant devra décider s'il souhaite effectuer des études supérieures ou entrer directement dans le monde du travail. Ses professeurs, ainsi que le psychologue de l'éducation nationale (qui représente le spécialiste de l'éducation) l'aideront dans ce choix.



## மேல்நிலை பள்ளியில் உங்கள் மகளின் / மகனின் பிரவேசம்

மேல்நிலைப் பள்ளியின் இயக்குநருக்கு **புரொவிசர்** (Proviseur) என்று பெயர். அவருக்கு உதவி-இயக்குநர் ஒருவர் துணைபுரிவார். வேண்டுகோளின் பேரில் அவர்களை நீங்கள் சந்திக்க இயலும்.

பிரான்ஸ் நாட்டில் 2 விதமான மேல்நிலைப் பள்ளிகள் உண்டு :

**பல சாத்தியக்கூறுகளை அளிக்கும் பொதுவான மற்றும் அறிவியல் சார்ந்த தொழிற்நுட்பக் கல்வி மேல்நிலைப் பள்ளி** மாணவர்களை மேல்படிப்புக்குத் தயார் செய்கிறது.

இது மூன்று வருடப் படிப்பு கொண்டது : இரண்டாவது, முதல் மற்றும் இறுதிவகுப்புகள் என்று அழைக்கப்படும். இவற்றில் மாணவர்கள், தத்தம் திறமை, விருப்பம் இவற்றுக்கேற்ப இலக்கிய, கலை, மொழிக் கல்வி, அறிவியல் கல்வி , பொருளாதாரக் கல்வி அல்லது தொழில்நுட்ப கல்வி சீர்திருத்தங்களில் உள்ள ஆழமான பாடங்கள். பாக்கலோரியா (Baccalauréat) பிரஞ்சு தேர்வுகள் முதல் ஆண்டின் இறுதியில் திட்டமிடப்பட்டுள்ளன

இறுதி ஆண்டு படிப்பு முடிந்தபின் வழங்கப்படும் பட்டயம் பாக்கலோரியா (Baccalauréat) என்று அழைக்கப்படுகிறது.

**தொழிற்கல்வி உயர்நிலைப் பள்ளி** மாணவர்கள் இன்னும் விரைவாகவே உழைப்பவர் உலகத்தில் இடம் பெற உதவுகிறது; தகுதி உள்ள சில மாணவர்கள் மேல்படிப்பை மேற்கொள்ளவும் இயலும்.

இந்தப் படிப்பு பலவிதப் பட்டயங்களுக்கு வாய்ப்பு அளிக்கிறது, CAP பட்டயம் முதல் தொழில்ரீதி பாக்கலோரியா வரை.

இங்கு மாணவர்கள் பொதுப் பாடங்களையும், அறிவியல் சார்ந்த தொழில்நுட மற்றும் தொழில் ரீதியான படிப்பையும் ஒன்றாகப் பயில்கின்றனர்.

தொழில் நிறுவனங்களில் பெறப்படும் நேரடியான பயிற்சி வகுப்புகள் கட்டாயமாக இருக்கின்றன.

இங்கு பள்ளியின் கால அட்டவணையில் **மணி நேர தனிப்பட்ட கவனம்** என்று ஒரு பகுதி ஒதுக்கப்படுகிறது. இதில் மாணவருக்குக் கடினமாக இருக்கும் துறையில் முன்னேற்றம் அடையவோ அல்லது புது தொழில் செயல்முறைகளைக் கற்றுக்கொள்ளவோ உதவி அளிக்கப்படுகிறது,பிந்தைய பட்டதாரி நோக்குநிலை திட்டத்தில் வேலை. இந்த மணிநேரப் பகுதியின் உதவியினால், உங்கள் குழந்தை பிரெஞ்சு தேர்ச்சி பெறவும் முடியும்.

**மேல்நிலைப் பள்ளிகளில்** மாணவர்களுக்குப் பெருமளவு சுயாதிகாரம் கிடைக்கிறது. வீட்டிலும் நிறைய உழைத்துப் படித்தால்தான் வெற்றி காண முடியும். அவன் செய்ய வேண்டியது என்னவென்று வகுப்பில் சொல்லப்பட்டதைச் சரியாகப் புரிந்துகொண்டானா என்று உறுதி செய்து கொள்ளுங்கள்.

உங்களுக்கோ உங்கள் குழந்தைக்கோ ஏதாவது கவலையோ சந்தேகமோ இருந்தால், பிரதான ஆசிரியரைச் சந்தித்துப் பேச விண்ணப்பிக்கலாம்.

மேல்நிலைப் பள்ளியில், சரியான வழிபடுத்தும் நடைமுறை என்பது முக்கியமாக இருக்கிறது. மேல்படிப்பு படிக்கவேண்டுமா அல்லது நேரடியாக உழைப்பவர் உலகத்தில் நுழைய வேண்டுமா என்று உங்கள் குழந்தை ஒரு முடிவுக்கு வரவேண்டும். அதன் பேராசிரியர்கள், அதே போல் தேசிய கல்வி உளவியலாளர் ஆகியோர் இந்த தேர்வில் மாணவர்களுக்கு உதவுவார்கள்